**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR**.

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 151 of 2025 |

Depositions of PW -3 witness for ________ { Prosecution / Defence / Court

Name : நிஷாந்த்

Father's Name : ராமசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of November** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை மாவட்டம் பூரண்டம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு அம்பிகா நெட் பேஷன் என்ற பெயரில் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த கந்தசாமி எனது மாமாவின் அப்பா ஆவார். நான் கடந்த 03.12.2021 ம் தேதி மதியம் சுமார் 12.30 மணி அளவில் சுவையகம் ஹோட்டலில் டீ சாப்பிட்டு விட்டு நானும் எனது மாமா ரத்தினசாமி இருவரும் வெளியே நின்று பேசிக் கொண்டிருந்த பொழுது மேற்கிலிருந்து கிழக்காக கந்தசாமி அவர்கள் TVS XL இருசக்கர வாகனத்தில் ரோட்டை கடந்த பொழுது பொள்ளாச்சியில் இருந்து பல்லடம் நோக்கி வந்த புல்லட் ரோட்டை கடந்து கொண்டிருந்த கந்தசாமி மீது மோதி விட்டது.

2. விபத்தில் கந்தசாமி அவர்களுக்கு தலை, கால் மற்றும் கை ஆகிய இடங்களில் அடிபட்டிருந்தது. நாங்கள் அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். விபத்து குறித்து ரத்தினசாமி அவர்களுக்கு

தகவல் சொன்னேன் அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். BULLET REGN NO 3924 ஆகும்.ஆஜர் எதிரி தான் புல்லட் வாகனத்தினைஓட்டி வந்து கந்தசாமி அவர்கள் மீது மோதி விபத்தை ஏறப்டுத்தினார். பின்னர் கந்தசாமி அவர்கள் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நானும் சம்பவ விபத்தை ரத்தினசாமி அவர்களும் பார்த்தோம். மேலும் பொதுமக்களும் சம்பவத்தை பார்த்தார்கள். போலீசார் விசாரித்த பொழுது ரத்தினசாமி மற்றும் பழனிச்சாமி என்னுடன் இருந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் மூன்று பேரும் பேசிவிட்டு கந்தசாமி கிளம்பிய பிறகு விபத்து ஏற்பட்டது. சம்பவத்தின் பொழுது கந்தசாமி அவர்களுக்கு வயது சுமார் 80 இருக்கும். கந்தசாமி அவர்கள் இருசக்கர வாகனத்தில் எங்கிருந்து எங்கு சென்றார் என்றால் மண் ரோட்டில் வந்து மேற்கிலிருந்து கிழக்காக சென்ற பொழுது விபத்து ஏற்பட்டது. சம்பவ விபத்தானது சம்பவத்தில் இறந்த கந்தசாமி அவர்களின் அஜாக்கிரதையால் ரோட்டை கவனிக்காமல் ரோட்டை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.10 18:53:29 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**